26.09.2022

அசல் வழக்கு எண்: 158/2015

பி.வா.சா.3 சாட்சி சுரேந்திரன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

நான் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை முதல் விசாரணையின் போது கொண்டுவராததால் இன்று அந்த ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க அவகாசம் அளிக்கப்பட்டது. அதன் அசல் ஆவணங்கள் மாவட்ட வருவாய் அலுவலகத்தில் இல்லை. அவை அனைத்தும் திருமங்கலம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து பெற்று கொண்டுவந்துள்ளேன். (**அசல் ஆவணங்கள் அனைத்தும் திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து கொண்டு வரபட்டுள்ளதால் அவைகளை இந்த சாட்சி மூலம் குறியீடு செய்வதற்கு வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. எனவே முதல் விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**)

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் எந்த சொத்து சம்பந்தமாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் பழைய சர்வே எண். 155/5B புதிய சர்வே எண்.399/3 சம்பந்தமாக சொல்ல வந்துள்ளேன். எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 00.16.23 ஏர்ஸ் ஆகும். தாவா சொத்து கிராம நத்தத்தில் கட்டுப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து யாருடைய பெயரில் பட்டா உள்ளது என்றால் அடங்களை பார்த்துதான் சொல்ல முடியும். UDR ல் தவறு ஏற்பட்டால் அதனை சரி செய்வதற்கு மாவட்ட வருவாய் அலுவலருக்கு மட்டும் தான் அதிகாரம் உள்ளது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.1 அடங்களின் படி யாருடைய பெயரில் பட்டா உள்ளது என்றால் ரங்கன் மனைவி கஸ்தூாி, சுந்தர்ராச

அய்யங்கார் மகன் நரசிம்மன் மற்றும் நாராயணதேவர் ஆகியோர்கள் பெயரில் உள்ளது. இன்று வரை அவர்கள் மூவர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். பொதுவாக கிராம நத்தத்தில் யார் குடியிருக்கிறார்களோ அவர்கள் பெயரில் பட்டா வழங்குவதுதான் வழக்கம் என்றால் யார் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்களோ அவர்கள் பெயருக்கு பட்டா வழங்கப்படும். கிராம நத்தத்தில் வீடு கட்டி பட்டா பெற்றுள்ள நபர்தான் அந்த இடத்தின் உரிமையாளர் என்று கருதப்படுவார்கள் என்றால் சரிதான்.

இந்த வழக்கில் தாவா சொத்து விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் வீடு உள்ள விபரம் தெரியுமா என்றால் அங்கு வீடு இல்லை. எதை வைத்து வீடு இல்லை என்று கூறுகிறேன் என்றால் நான் நேரில் சென்று பார்த்தேன். அங்கு வீடு இல்லை. வீடு உள்ளது என்றாலும் 15 வருடங்களாக ரசீது போடப்பட்டு வருகிறது என்றால் தாவா சர்வே எண்ணில் வீடு இல்லை. எனக்கு வழக்கு விபரம் தெரியாமல் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.